**Starting time 03.55 P.M.**

**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT MUNSIF, ATTUR**

**O.S. No. 240/2015**

Deposition of **P.W.1** witnesses for Plaintiff/Defendant Solemnly affirmed by Tmt. A.Tamilselvi, Gr. III Bench Clerk of this court, on 31.01.2023 in accordance with the provisions of Act 1 of 1873.

| | | | |
|---|---|---|---|
| Name | : ஐயம்மாள் (எ) உமாமகேஸ்வரி | Father's Name | : |
| Village | : | Taluk | : |
| Caste | : | Religion | : |
| Calling | : | Age | : |

**8-ஆம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை :** எனது நிரூபண வாக்குமூலத்தில் எனக்கு வயது 28 ஆக சொல்லியுள்ளது தவறு, தற்போது எனக்கு 27 வயதுதான் ஆகிறது. நான் 19.06.1995-ஆம் ஆண்டு பிறந்தேன். எனக்கு 19.11.2011-ஆம் ஆண்டு திருமணம் நடைபெற்றது. 24.10.2005 அன்று வா.சா.ஆ.2-ன் மூலம் 8 ஆம் பிரதிவாதி தாவா சொத்தை கிரயம் பெறும் போது நாங்கள் எங்கு குடியிருந்தோம் என்றால், தாவா சொத்தில்தான் குடியிருந்தோம். எனது சித்தப்பா பழனிச்சாமி எங்கள் குடும்பத்திற்கு சொந்தமான பாதி நிலத்தை 8-ஆம் பிரதிவாதிக்கு 19.08.2005 அன்று விற்பனை செய்துவிட்டார் என்றால், சரிதான். மேற்படி நிலத்தை யார் யார் சேர்ந்து விற்றார்கள் என்று எனக்கு தெரியும். வா.சா.ஆ.2 ஆவணம் ஏற்பட்ட பிறகு நாங்கள் தாவா சொத்திலிருந்து வெளியேறி வேறு இடத்திற்கு குடி சென்று விட்டோம்.

2. நான் எங்கு குடியிருக்கிறேன் என்றால், என் கணவருடன் மங்களபுரத்தில் குடியிருக்கிறேன். தாவா சொத்திற்கு அருகில் எனது அம்மா குடியிருக்கிறார். தாவா சொத்து விற்பனை பற்றி எனக்கு தெரியுமா என்றால், விற்றது பற்றி எனக்கு தெரியாது. ஆனால் 8-ஆம் பிரதிவாதி நிலம் சம்மந்தமாக எனது அப்பாவிற்கு பணம் கொடுத்தது எனக்கு தெரியும். எனது

அப்பா 2015-ஆம் ஆண்டு இறந்துவிட்டார். எனது அப்பா இறந்தபிறகுதான் தாவா சொத்து விற்பனை செய்த விவரம் எனக்கு தெரிய வந்தது. மேற்படி கிரயத்திலிருந்து வந்த பணத்தை எனது குடும்பத்தினர் கெட்ட வழியில் அழித்துவிட்டனர் என்று சொல்லியுள்ளேன் என்றால், எனது அப்பா எனக்காக எதுவும் செய்யவில்லை, குடித்து அழித்துவிட்டார். எனது திருமணம் எனது அம்மா மற்றும் அண்ணன்களால் ஏற்பாடு செய்யப்பட்ட திருமணம் ஆகும். எனது அம்மா மற்றும் எனது அண்ணன்கள் ஆகியோர் எனது அப்பாவுடன் கிரயப்பணத்தை ஊதாரி தனமாக செலவு செய்துவிட்டார்கள் என்று சொல்லியுள்ளேன் என்றால், சரிதான். நான் 10-ஆம் வகுப்பு வரை தாண்டவராயபுரத்தில்தான் படித்தேன்.

3. எனது அப்பா, அம்மா மற்றும் அண்ணன்கள் சேர்ந்துதான் எனக்கு செலவு செய்து திருமணம் செய்து வைத்தனர் என்று சொன்னால், சரியல்ல. எனது அப்பா உயிருடன் இருக்கும் வரை வழக்கு தாக்கல் செய்யாமல் அவர் இறந்த பிறகு துர்லாபம் அடையும் எண்ணத்தில் நான் எனது அண்ணன்கள் மற்றும் அம்மாவுடன் சேர்ந்து இந்த பொய் வழக்கை தாக்கல் செய்தேன் என்றால், சரியல்ல. எனது அப்பா இறந்தபிறகுதான் தாவா சொத்து விற்பனை பற்றி எனக்கு தெரியும்.

4. தாவா சொத்து எனது தாத்தா முத்துசாமிக்கு டி கார்டு மூலமாக பாத்தியப்பட்டது என்றால், சரிதான். எனது தாத்தா இறந்த பிறகு எனது அப்பாவும், சித்தப்பாவும் மேற்படி டி கார்டு மூலம் பாத்தியப்பட்ட சொத்தை வாய்மொழி பாகப்பிரிவினை செய்து தனிதனியாக அனுபவம் செய்து வந்தனர் என்றால், சரிதான். எனது தாத்தாவுடைய சொத்து டி கார்டு மூலம் பாத்தியப்பட்ட அவருடைய சுயராஜ்த சொத்து என்று சொன்னால், சரியல்ல. எனவே தாவா சொத்து எனது அப்பா மற்றும் சித்தப்பாவிற்கு மட்டும்தான் பாகம் உள்ளது என்றும், எங்களுக்கு யாருக்கும் பாகம் இல்லாததால் இந்த தாவா செல்லத்தக்கதல்ல என்று சொன்னால், சரியல்ல.

5. எனது சித்தப்பாவிற்கு மேற்படி பாகம் மூலம் பாத்தியப்பட்ட சொத்தை 8-ஆம் பிரதிவாதிக்கு விற்கும்போது அவரும், அவருடைய மனைவி மற்றும் அவருடைய மைனர் குழந்தைகள் 2 பேரும் சேர்ந்து தான் விற்றனர் என்றால், அதுபற்றி எனக்கு தெரியாது. ஆனால் மேற்படி எனது சித்தப்பாவுடைய வாரிசுகள் மேற்படி கிரயத்தை எதிர்த்து வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றால், சரிதான். இந்த வழக்கு காலம் கடந்து தாக்கல் செய்துள்ளதாலும்,

இந்த வழக்கு சொத்தில் எனக்கு பாகம் இல்லாததாலும், இந்த வழக்கு தள்ளுபடி செய்யவேண்டும் என்று சொன்னால், சரியல்ல. தாவா சொத்து கிரயம் பெற்ற தேதியிலிருந்து 8-ஆம் பிரதிவாதிதான் தாவா சொத்தை அனுபவித்து இருந்து வருகிறார் என்று சொன்னால், சரியல்ல.

8-ஆம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை முழுவதும் முடித்துக் கொள்வதாக தெரிவிக்கப்பட்டது.

End time: 04.20 P.M.

**ஒப்பம்/- அ.நர்தாராணி**
**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி, ஆத்தூர்.**